விவாத அரங்கின் முடிவில், மத்திய சுகாதார கல்விக் கழக நிர்வாக அதிகாரி, மாநாட்டில் கலந்துகொண்ட திறனாய்வாளர்கள், பிரதிநிதிகள் எல்லாருக்கும் நாட்படி பகிர்ந்தளித்தார். பள்ளி, கல்லூரிக் கல்வித் துறை இயக்குநர் அலுவலகப் பிரதிநிதிகளும் மக்கள் நல்வாழ்வுத் துறை இயக்குநர் அலுவலகப் பிரதிநிதிகளும் சந்தித்து, தொகுதி அறிக்கைகளை ஒழுங்குபடுத்தினர்.

இணைப்பு II

[232 ஆம் பக்கத்தில் 72-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

(அ) & (இ) : இளம்பிள்ளை வாதம் குறித்து 1970, 1971, 1972 ஆம் ஆண்டுகளில் ஆய்வு ஒன்று சமூகக் கோணத்திலிருந்தும், கொள்ளை நோயியல் சிகிச்சை கண்ணோட்டத்துடனும் சென்னை சிசு நல நிலையம் குழந்தைகளுக்கான மருத்துவமனையில் நடத்தப்பட்டது. இளம்பிள்ளை வாதத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட 3,591 குழந்தைகளுக்கு மேற்சொன்ன மருத்துவமனையில் வெளி நோயாளி சிகிச்சைப் பிரிவிலும், அக நோயாளி சிகிச்சைப் பிரிவிலும் சிகிச்சையளிக்கப்பட்டது. இதுவே மேற்படி ஆய்வினை மேற்கொள்ள அடிப்படையாக அமைந்தது. இந்த ஆய்வின் முடிவில் கிடைத்த முக்கிய கூறுகள் பின்வருமாறு :—

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நோய் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் :

மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகள்.	கிராமப்புறம் 8.3 சதவீதம். நகர்ப்புறம் 91.7 சதவீதம்.

நகர்ப்புறப் பகுதிகளில் நோய் பரவியிருத்தல் :

கீழ் வகுப்பு அல்லது நடுத்தர வகுப்பு மக்கள் மிக நெருக்கமாக வாழ்ந்து வரும் பகுதிகளில் இளம்பிள்ளை வாதநோய் அதிக அளவில் காணப்படுகிறது. அதாவது அண்ணாசாலை, பெரம்பூர் பேரக்ஸ், வேப்பேரி, கோடம்பாக்கம் முதலிய பகுதிகளில் உள்ளது போல், பழைய பெரிய வீடு ஒன்றில் பொதுவான குளியலறையுடன் 15 முதல் 20 குடும்பங்கள் வரை வசித்து வருகின்றன. இப்படிப்பட்ட இடங்களில் இளம்பிள்ளை வாதநோய் பெருமளவில் காணப்படுகிறது.

1973 நவம்பர் 23]

அண்ணா நகர், ஷெனாய் நகர் ஆகிய இடங்களில் உள்ளதுபோல் உயர் வகுப்பு மக்களும் உயர் நடுத்தர வகுப்பு மக்களும் வாழ்ந்து வரும் இடங்களில் இந்த நோய் குறைவாகக் காணப்படுகிறது.

நோய் பாதிக்கப்படும் இடங்கள் :

நரம்புத்தண்டு—76.5 சதவீதம்.

நரம்புத்தண்டு மூளையுடன் சேருமிடம்—22.2 சதவீதம்.

நரம்புத்தண்டின் மேல்முனை—1.3 சதவீதம்.

இளம்பிள்ளை வாதநோய் பாதிக்கப்பட்டிருப்பவர்களில் ஏறக்குறைய நான்கில் ஒரு பங்கினரிடம் உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய நோய் காணப்படுகிறது.

ஆடவரை நோய் பாதித்தல் :

இந்த வகை நோயினால் ஆடவரே அடிக்கடி பாதிக்கப்படுகின்றனர். இந்த நோய்ப் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் 60 சதவீதம் ஆடவர்களேயாகும்.

கால வேறுபாடு :

நவம்பர், டிசம்பர், ஜனவரித் திங்களில் ஏராளமான பேருக்கு இந்த நோய் ஏற்படுகிறது.

நோய் பாதிக்கப்பட்டுள்ள வயதினர் :

9 மாதம் முதல் 1½ ஆண்டு வயதுடைய குழந்தைகள் பெரும்பாலோரிடையே இந்த நோய் காணப்படுகிறது. மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளிடையே இந்த நோய் மிகவும் குறைவாகக் காணப்படுகிறது.

வருமானத்தின் அடிப்படையில் விளையும் பொருளாதாரக் குறைபாடு :

நடுத்தர, உயர் நடுத்தர வருமானம் பெறுபவரிடையே இந்த நோய் பொதுவாகக் காணப்படுகிறது.

பொது மருத்துவர்களிடம் தடுப்பு ஊசி போட்டுக்கொள்ளும் சில குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாதம் ஏற்பட்டுள்ளது. இதுபற்றி விசாரித்ததில், பொது மருத்துவர்கள், மருந்தினை நல்ல நிலையில் வைத்துவராததே இதற்கு முக்கியக் காரணம் எனத் தெரியவந்தது.

பக்கவாத நோய் பாதிக்கும் பகுதிகள் :

நோய் பாதிக்கப்பட்டுள்ளவர்களில், அதாவது மருத்துவ மனைக்குப் புறத்தேயிருந்து, சிகிச்சை பெறும் நோயாளிகளில், 92 சதவீதத்தினருக்குக் கால்களில் முடக்கு வாதம் கண்டிருந்தது. மருத்துவ மனையில் தங்கியிருந்து

சிகிச்சை பெறும் நோயாளிகளில் பெரும்பாலோருக்கு உடலில் மேற் பகுதியிலும் முடக்கு வாதம் கண்டிருந்தது. இவ்வாறு உடலின் மேற்பகுதி இந்த நோயினால் பாதிக்கப்பட்டால் நோய் முற்றி உயிருக்கே ஆபத்து நேரிடும் என்று தெரிகிறது.

இந்த நோய்க்காகச் சிகிச்சை பெற்று நலமாகி வருவோரின் சதவீதம் :

நோய் பாதிக்கப்பட்டவர்களில் ஏறக்குறைய 86 சதவீதத்தினர் நன்கு சிகிச்சை பெற்று நலமடைந்துள்ளனர்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III

[235 ஆம் பக்கத்தில் 61-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

துறைத் தலைவர்கள்

ஐ.ஏ.எஸ். :

1. வேளாண்மைத் துறை இயக்குநர்
2. தொல்வேடுகள் துறை ஆணையாளர்
3. பிற்பட்டோர் நலத் துறை இயக்குநர்
4. உணவுபொருள் வழங்கு துறை இயக்குநர்
5. தொழிலாளர் நலத் துறை ஆணையாளர்
6. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்
7. பால் உற்பத்தி, பால்பண்ணை வளர்ச்சித் துறைகளின் ஆணையாளர்
8. வேலை வாய்ப்பு, மற்றும் பயிற்சித் துறை இயக்குநர்
9. மீனளத் துறை இயக்குநர்
10. கைத்தறி, பஞ்சாலைகள் இயக்குநர்
11. அரிசன நலத் துறை இயக்குநர்
12. இந்து அறநிலைய மற்றும் அறக்கட்டளைகள் (நிர்வாகத் துறை) இயக்குநர்